**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| **STC. No.** | **180/2025** |
|---|---|
| **பெயர்:** | **மணிகண்டன்** |
| **தந்தை பெயர் :** | **சுப்பிரமணியன்** |
| **வயது:** | **48/2026** |
| **ஊர்:** | **க.எண்.426, மெயின் ரோடு ,<br>தம்பிக்கோட்டை வடகாடு கிராமம்,** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **வெல்டிங் தொழில்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **01th day of July 2026**

**<u>ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11:50 AM</u>**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி.உஷா (உதவியாளர்) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

1. எனது வெல்டிங் தொழில் மூலம் எனக்கு மாதம் ரூ. 40,000/- முதல் ரூ.50,000/-ஆகும். நான் எதிரிக்கு கடன்கொடுத்தபோது எதிரியுடன் யார்யார் இருந்தார்கள் என்றால், எதிரி மட்டும்தான் இருந்தார்.

2. எனது வரவு செலவு கணக்கினை பதிவு செய்யும் பழக்கம் உண்டா என்றால், இல்லை. எதிரிக்கு கொடுத்த கடனை ஏதேனும் ஆவணத்தில் எழுதி பதிவு செய்துள்ளேனா என்றால், இல்லை.

3. நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால், இல்லை. எதிரிக்கு இவ்வழக்கு தொகைக்கு முன்பு ஏதேனும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால், இல்லை.

4. எதிரிக்கு ரூ.7,00,000/- கடன் எப்படி கொடுத்தேன் என்றால், நான் வீடு கட்ட வைத்திருந்த பணம் ஆகும். எதிரியின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால், காசோலையில் பார்த்துள்ளேன்.

5. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும், எதிரி தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள கையொப்பமும் வேறுபாடாக உள்ளது என்று சொன்னால், சரியல்ல, அதைபோல் இரண்டு ஆவணங்களிலும் Initial மாறுபட்டுள்ளது என்று சொன்னால், எதிரி காசோலை கொடுத்தார் நம்பிக்கையின் பேரில் வாங்கினேன்.

6. காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்ற விபரத்தினை வங்கியில் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், Refer to Drawer என்று திருப்பப்பட்டுள்ளது. Refer to Drawer என்றால் என்ன காரணம் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை.

7. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்றும், நான் பொய்யாக கையொப்பம் இட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. காசோலை திருப்பபட்டதற்கு பின் எதிரியை தொடர்பு கொண்டேனா என்றால், எதிரி வீட்டிற்கு சென்றேன், அவர் வீட்டில் இல்லை.அதன்பின் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன், அதை எதிரி பெற்றுக்கொண்டார். எதிரி வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றும், எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால், சரியல்ல.

8. வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதாக தாக்கல் செய்யப்பட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பமும், காசோலையில் உள்ள கையொப்பமும், எதிரி வக்காலத்தில் உள்ள கையொப்பமும் வெவ்வேறாக இருக்கிறது என்று சொன்னால்,சரியல்ல.

9. 2013 ஆம் ஆண்டு நான் ஏன் சிங்கப்பூருக்கு சென்றேன் என்றால், வெல்டிங் வேலைக்காக சென்றேன். நான் என் திருமணத்திற்கு பத்திரிக்கை வைப்பதற்காக சிங்கப்பூர் சென்றேன். நான் அங்கு அருண்,சரவணன்,தம்பி அன்பரசன் என்பவர்களுக்கு பத்திரிக்கை வைப்பதற்காக சிங்கப்பூர் சென்றேன். நான் சிங்கப்பூர் சென்றபோது எங்கு தங்கியிருந்தேன் என்றால், தேக்கா என்ற இடத்தில் தங்கியிருந்தேன்.

10. எதிரியின் கணவருக்கும் எனக்கும் எப்போது பழக்கம் ஏற்பட்டது

என்றால், 2022 ல் பழக்கம். 2013 ல் பத்திரிக்கை கொடுக்க சிங்கப்பூர் சென்றபோதே எதிரியின் கணவர் அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்தார் என்று சொன்னால், அப்போது எனக்கு பழக்கம் இல்லை. எதிரிக்கும் அவரது கணவருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

11. எதிரியின் தொலைபேசி எண் தெரியுமா என்றால், தெரியும். தொலைபேசியில் உள்ளது. எதிரியின் கணவரின் தொலைபேசி எண் என்னிடம் உள்ளதா என்றால்,இல்லை, அவர் நம்பரை மாற்றிவிட்டார்.

12. எதிரியின் வீடு மாடி வீடு ஆகும். எதிரி எந்த ஊரில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால், தெரியாது. எதிரியின் கணவர் எந்த ஊர் என்றால், அவர் மன்னார்குடி என்று என்னிடம் கூறினார். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால், இரண்டு குழந்தைகள்.

13. நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்துள்ள அருண் என்பவர் என்னுடைய உறவினரா அல்லது நண்பரா என்றால், நண்பர் ஆவார். எதிரியின் கணவரான சுரேஷ்குமாரும், நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்துள்ள அருண் என்பவரும் சிங்கப்பூரில் வேலை பார்த்துவந்தபோது 10 வருடங்களாக ஒரே Room – ல் வசித்துவந்த விபரம் தெரியுமா என்றால், தெரியும்.

14. எதிரிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரியின் கணவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் தான் அவர்களின் தொலைபேசி எண் கூட எனக்கு தெரியவில்லை என்று சொன்னால், சரியல்ல.

15. எதிரியின் கணவரான சுரேஷ் குமாருக்கும் அருண் என்பவருக்கும்5 வருடத்திற்கு முன்பாக கொடுக்கல் வாங்கல் இருந்ததாகவும், அதற்கு செக்யூரிட்டியாக இரண்டு கையொப்பமிடாத காசோலைகளை (47 15 77 மற்றும் 47 15 78 ) சுரேஷ் குமார் என்பவர் அருண் என்பவரிடம் கொடுத்தது என்று சொன்னால், சரியல்ல.

16. 06.12.2024 அன்று அருண் என்பவருக்கு எதிரியின் கணவர் கொடுக்க வேண்டிய கடன்தொகைக்காக கடன் உறுதிமொழி பத்திரம் எழுதிகொடுத்தார் என்று சொன்னால், அது பற்றி எனக்கு தெரியாது.

17. எதிரியின் கணவரான சுரேஷ் குமார் என்பவர் அருண் என்பவருக்கு கடனை தீர்க்க தாமதமானதால், அருண் என்பவர் தொலைபேசி மூலம்

சுரேஷ் குமாரை திட்டினார் என்றும், அதனால் சுரேஷ்குமார், அருண் மீது கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் கடந்த 19.12.2024 ல் புகார் கொடுக்கப்பட்டு CSR.No. 1008/2024 என்று பதிவு செய்யப்பட்டு அருணை காவல்நிலையத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரிதார்கள் என்று சொன்னால், அது பற்றி எனக்கு தெரியாது.

18. நானும் எதிரியும் குடும்ப நண்பர் என்பதற்கு இணங்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால், ஆவணங்கள் இல்லை.

19. எதிரிக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், கடந்த 5 வருடத்திற்கு முன்பு சுரேஷ் குமார் மற்றும் அருணிற்கு இருந்த கொடுக்கல் வாங்கலில் கொடுக்கப்பட்ட காசோலையை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. தொலைபேசி மூலம் அருண் என்பவர் சுரேஷ் குமாரை திட்டியதற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததன்பேரில் ஏற்பட்ட விரோதத்தின் அடிப்படையில் அருண் என்பவர் காசோலையை என்னிடம் கொடுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல.

20. எதிரியானவர் எனக்கு செலுத்தவேண்டிய சட்டப்பூர்வமான கடன் ஏதும் இல்லை என்று சொன்னால், சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 12:29 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.